மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.32/2020

2024–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தி மரிய கிளாரா (Dw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.22.08.2024</u>

<u>பி.வா.சா.1</u>

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>**

நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்கள் எல்லாம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி பிரபாரகன் கொழுந்தன் ஆவார். பிரபாகரன் எனக்கு எதிராக என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் குடியிருக்கும் வீட்டை ரத்து செய்ய சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியின் தகப்பனார் ஞானபிரகாசம் என்பவருக்கு வாதி, எனது கணவர், மரிய சகாய லதா ஆகிய மூவரும் வாரிசுகள் ஆவார்கள். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் 2011 ல் இறந்தார். மரிய சகாய லதா எப்போது இறந்தார் என்றால் 1999 ல் இறந்துவிட்டார். ஞானப்பிரகாசம் தாவா சொத்தை எந்த வருடம் கிரையம் கொடுத்தார் என்றால் 2012 ம் ஆண்டு கொடுத்தார். எந்தெந்த சொத்துக்களை யார், யார் பெயருக்கு கிரையம் கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு இனாம் செட்டில்மெண்ட் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் தற்போது குடியிருக்கும் வீட்டிற்கு வடக்கு பக்கமாக யார் இருக்கிறார் என்றால் வாதி பிரபாகரன் குடியிருக்கின்றார். நான் குடியிருக்கும் வீட்டிற்கு மேற்கு பக்கம் 10 அடி அகல பொதுபாதை உள்ளது என்றால் சரிதான். எனக்கு இனாம் கொடுத்த சொத்து மொத்தம் எத்தனை செண்டு என்றால் 29 செண்டு ஆகும். இந்த 29 செண்டை A schedule, B schedule என இரண்டாக பிரித்துக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் 3 வது பிரதிவாதி ராபினுக்கு A schedule சொத்தில் 11.7 செண்டு சொத்தும் கொடுத்துள்ளார். அதே போல் B schedule சொத்தில் 2 ம்பிரதிவாதி மரிய ஹேமா, 3 ம் பிரதிவாதி ராபின், 4 ம்பிரதிவாதி மரிய டயானா ஆகியோருக்கு சேர்த்து 18 செண்டை கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 2 இலக்க சொத்திற்கும் நான் தான் கார்டியனாக இருந்து பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். மரிய டயானாவின் தாயார் மரியசகாய லதா என்றால் சரிதான். மரிய டயானாவின் தகப்பனார் செல்வராஜ் உயிருடன் தான் உள்ளார். மரிய டயானா, அவரது தகப்பனார் மதுரையில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள் என்றால சரிதான். ஞானப்பிரகாசம் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தில் சர்வே எண்.383/1F2A அதன் மொத்த விஸ்தீரணம் 28 செண்டு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு செட்டில்மெண்ட் படி கொடுக்கப்பட்ட சொத்தின் மொத்த அளவு 29.7

செண்டு என்றால் சரிதான். செட்டில்மெண்டில் உள்ள சொத்தினை நான் பவர் மூலமாக அகிலன் என்பவருக்கு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் பவல் கொடுத்ததாக சொல்லும் அகிலன், சார் பதிவாளர் ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியும். எந்த வருடம் புகார் கொடுத்தேன் என்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. நான்கொடுத்த புகார் வாக்குமூலத்தில் என்ன விபரம் சொன்னேன் என்று ஞாபகம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து பற்றியோ, அது சம்பந்தமாக ஏற்பட்ட முதல் தகவல் அறிக்கை பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது, வழக்கிற்காக பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஞானப்பிரகாசம் அவரது மனைவி மரிய செல்வராணிக்கு 19.09.2011 தேதியில் ஒரு சொத்தை இனாம் கொடுத்துள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியும். அந்த இனாம் செட்டில்மெண்டை 01.11.2011 தேதியில் ரத்து செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ரத்து பத்திரத்தை எதிர்த்து மரிய செல்வராணி மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு எண்.WP(MD)No.9693/2012 ல் ஞானப்பிரகாசம், மரிய ஹேமா, ராபின், மரிய டயானா, விஜயா, ஸ்டாலின் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 21.08.2014 ல் மரிய செல்வராணிக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. ஞானப்பிரகாசம் எனக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யசொல்லி இராமநாத்புரம் மாவட்ட நீதிமன்றத்தில் OS.No.54/2014 வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் தரப்பினராக நான், எனது மக்கள் 3, 4 பிரதிவாதிகள் மற்றும் சார் பதிவாளரை சேர்க்கப்பட்டு சமரசமாக அந்த வழக்கை முடித்து கொண்டோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் அகிலனுக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் மூலமாக இந்த வழக்கு சொத்தை பிரகாஷ் மற்றும் நோவல் என்பவர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் வாதி பிரபாகரன் மனைவி பிரியாவிற்கும், எனக்கும் உள்ள கருத்து வேறுபாடு காரணமாக பிராபகரனை வீட்டை காலி செய்ய சொல்லி பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் வாதி மீது புகார் எந்த காவல்நிலையத்தில் கொடுத்தேன் என்றால் நகர் காவல்நிலையத்தில் கொடுததேன். அதுஎந்த வருடம் என்று எனக்கு தெரியாது. நோவல் மீது கொடுத்த புகார் எந்த வருடம் கொடுத்தேன் என்றால் 2013 ல் கொடுத்தேன். பிரபாகரன் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறார் என்றால் மூன்று வருடமாக குடியிருந்து வருகிறார். ஞானப்பிரகாசம் எந்த வருடம் இறந்தார் என்றால் 2019 ல் இறந்தார். 2014 ல் ஞானப்பிரகாசம் வழக்கு தாக்கல் செய்யும்போது பிரபாகரனோடு அந்த வீட்டில் தான் குடியிருந்து வந்தார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரிந்து தான் தாக்கல் செய்துள்ளேன். தற்போது நான் சாட்சியத்தில் சொன்னததைத்தான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிராபகரன் குடியிருந்து வரும் வீட்டினை காலி செய்ய சொல்லி எந்த நீதிமன்றத்திலும் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எந்த வழக்கு விபரமும் தெரியாமல் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பிரபாகரன் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான்

குடியிருந்து வரும் வீட்டிற்கு வரிரசீதோ, முகவரியை காட்டக்கூடிய ஆவணமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஓம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.